மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, பவர் லூம் காம்ப்ளக்ஸ் நூல் பற்றாக்குறை பற்றி கேட்கிறார்கள். பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் 25 ஆயிரம் ஸ்பின்டில்ஸ் அளவில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டு கூட்டுறவு நூற்பாலை அந்த மாவட்டத்தில் அமைக்கிற வாய்ப்பு இல்லை.

திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி நூற்பாலை விரிவாக்கத் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே கேள்வி தாராபுரத்தில் உள்ள நூற்பாலையை விரிவாக்கம் செய்வதைப் பற்றியதாகும். எனவே உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கும் இந்த ஆலை குறித்த தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு. டி. என். முருகானந்தம்: தலைவர் அவர்களே, புதியதாக கூட்டுறவு நூற்பாலை தொடங்குவதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு உரிமங்கள் கேட்டு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஏழை எளிய மக்கள் அணிவதற்கு வாய்ப்பாக பாலியஸ்டர் துணிகள் உற்பத்தி செய்யும் நூற்பாலைகள் துவங்க உரிமங்கள் தாராளமாக வழங்கப்படுமென்று பாரதப் பிரதமர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆகவே பாலியஸ்டர் நூற்பாலைகள் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, இந்த மூன்று நூற்பாலைகள் கூட பாலியஸ்டர் நூற்பாலைகளுக்குத்தான் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது.

வேதாரண்யம் கைக்குத்தலரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

183—(*வினா எண் 9407) திரு. மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் கைக்குத்தலரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கைகுத்தலரிசித் தொழிலில் மட்டும் ஈடுபட்டிருந்த சங்கத்தை பல தொழிற் கூட்டுறவுச் சங்கமாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, இந்த கைக் குத்தலரிசி குடிசைத் தொழிலுக்கு மாற்று ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்போது துவங்கப் படும்? அதிலே எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, அது கூட்டுறவுத் துறையில் இருக்கிற காரணத்தால் சட்டப்படி என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொண்டு ஏற்கனவே இருக்கிற தொழிலை நிறுத்தி புதிய தொழிலைத் துவங்க வேண்டுமோ அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வேகமாகப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். முன்பு பணியாற்றியவர்கள் அத்தனை பேருக்கும் அதிலே பணி கிடைக்கும்.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, வேதாரண்யம் கைக்குத்தல் அரிசி குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கம் மட்டுமல்லாமல் திருமழிசைக்குப் பக்கத்தில் இருக்கிற இப்படிப் பட்ட சங்கமும் இப்போது இயங்காமல் இருக்கிறது. அதற்கும் மாற்று நடவடிக்கைகள் எடுத்திருப்பார்களென்று கருதுகிறேன். மொத்தத்தில் கைக்குத்தலரிசி விற்பனையானால் இந்தச் சங்கங்கள் எல்லாம் செம்மையாகச் செயல்படும். எனவே தமிழ்நாட்டில் 85 லட்சம் மக்களுக்கு இலவச உணவு அளிக்கும் போது அங்கே சத்தோடு கூடிய கைக்குத்தலரிசி, தவிடு நீக்காத அரிசி போடுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, மற்ற அரிசியோடு ஒப்பிடுகிறபோது கைக்குத்தல் அரிசியின் விலை அதிகமாகிறது. சுமார் 4½ ரூபாய் ஆகி விடுகிறது. அதைச் சத்துணவுத் திட்டத்திற்கு உபயோகப் படுத்துவது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இரண்டாவது இந்த கைக்குத்தலரிசியை நம்மைப் போன்ற பெரியவர்களே பெரியதாக இருப்பதால் சாப்பிட அச்சப் படுகிறார்கள். ஆகவே குழந்தைகளுக்கு அதைக் கொடுப்பது என்பது முடியாத காரியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தள்ளிப் போடப்பெற்ற வினாக்கள் 115, 116 மற்றும் 118 இப்போது எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

அரக்கோணம் வட்டத்தில் ஏரிகளை சீர்செய்தல்

115— (*வினா எண் 2019) திரு. வி. கே. இராசு: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—